திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ள அந்தப் போக்குவரத்துக் கழகத்தை எங்களுடைய பிற்படுத்தப்பட்ட மாவட்டமான திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தையும் உள்ளடக்கி, நான்காவதாகப் பிரித்து மேலும் ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாபிராமன் குழுவினுடைய பரிந்துரை 350லிருந்து 600 பேருந்துகள் வரை இருந்தால் ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பிக்கலாம் என்ற ஒரு பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதே போன்று தில்லைநாயகம் உயர் மட்டக் குழு 750 பேருந்துலிருந்து 1,200 பேருந்துகள் வரை இருந்தால் அதைப் பிரிக்கலாம் என்ற பரிந்துரையை செய்திருக்கின்றார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் போக்குவரத்துக் கழகத்தில், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் 680 பேருந்துகள் தான் இருக்கின்றன. அதேபோன்று இங்கே மற்றுமிருக்கின்ற புரட்சித் தலைவருடைய பெயரால் உருவாக்கப்பட்டிருக்கின்ற அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் 662 பேருந்துகளை இப்போது இயக்கிக்கொண்டிருக்கிறோம். தந்தை பெரியாருடைய போக்குவரத்துக் கழகத்தில் 782 பேருந்துகள் இருக்கின்ற காரணத்தினால் இப்போது அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 69, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

69—

இராசிபுரம் தொகுதியில் கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றல்.

*9652—திருமதி க. பழனியம்மாள்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் தொகுதியில் நடப்பாண்டில் எத்தனை கைத்தறிகள் விசைத்தறிகளாக மாற்றப்பட உள்ளது ?

(ஆ) எத்தனை நெசவாளர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கப்பட உள்ளது ?

1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) 1991-92-ல் கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள இடங்கள் முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன. இதில் இராசிபுரம் தொகுதி இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) நெசவாளர்களுக்கு இலவசமாக வீடுகட்டும் திட்டம் இத்துறையில் செயல்படவில்லை. ஆனால், நெசவாளர்களுக்கு மானியம் மற்றும் கடனுடன் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் உள்ளது. இராசிபுரம் கைத்தறி பட்டு மற்றும் துணி நூல் கூட்டுறவு சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் வீடுகட்டும் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்துள்ளதால் அவர்களில் 55 உறுப்பினர்களுக்கு 1991-92-ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் வீடுகட்ட குறிப்பு இருக்கிறது.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் முதன் முறையாக நெசவாளர்களுக்கு பல விதமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய இராசிபுரம் தொகுதியின் மொத்த ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அத்தகைய இராசிபுரம் தொகுதி இந்த ஆண்டு கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றும் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று அமைச்சர் கூறியிருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டிலாவது இராசிபுரம் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள மாத்தூர், திருச்சி மாவட்டத்திலிருக்கின்ற ஜெயங்கொண்டான், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற நாகர்கோவில் ஆகிய மூன்று பகுதிகளில் நெசவாளர்கள் ஜனதா ரக துணிகளையும், லுங்கிகளையும், வேட்டிகளையும் தயாரித்து வருகின்றார்கள். இவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்கின்ற காரணத்தால், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களாக இருக்கின்ற காரணத்தால், இவர்களிடையே பொருளாதார மேம்பாட்டினை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், ஒட்டிய வயிரோடு இருக்கின்ற அவர்களுடைய வறட்சியைத் தீர்க்க

TRUTH ALONE TRIUMPHS

வேண்டுமென்பதற்காக இந்தப் பகுதியில் 500 கைத்தறிகளை 1,000 விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 2000 கைத்தறிகளை 5,000 விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் உள்ளது. அதில் பரிசீலிக்கலாமா என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70. திரு. எம். தங்கவேல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

70—

திருச்சி—துறையூர் சாலையை அகலப்படுத்துதல்.

*9711—திரு. எம். தங்கவேல்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி--துறையூர் சாலையை அகலப்பாதையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

முற்பகல் 10–10

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். திருச்சியிலிருந்து துறையூர் செல்லுகிற வழியில் 15 கிலோ மீட்டர் தொலைவில் மணச்சநல்லூர் உள்ளது. அந்த மணச்சநல்லூர் சாலை அகல சாலையாக உள்ளது. மணச்சநல்லூரிலிருந்து துறையூர் வரை 20 கிலோ மீட்டர் தூரம் குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தாலே பஸ் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. அதை மாற்றி அகலப்பாதையாக வரும் ஆண்டிலாவது சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூரிலிருந்து துறையூர் வரை ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் அந்த சாலை இருக்கிறது. ஏற்கனவே ஒரு வழி சாலையாக இருக்கிற